முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 620**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

10.06.2021, வியாழக்கிழமை

1. கலிவெல்ல பிறந்த ஞானியே
   கலியுகத்தின் மாதவயோகியே
   அழியாமை தந்து உலகமக்களை மீட்க
   ஆறுமுகன் என் அவதாரமாக வந்த ஞானியே
2. ஞானியே ஆறுமுக அரங்கனே
   ஞாலமதில் உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி
   கனிவுபட சுப்ரமணியர் யானும் இனிதே விளம்புவேன்
   கருணைபட அரங்கனுள் என் சக்தி இருக்க
3. இருக்கவே அரங்கன் ஆசி பெற்ற மக்களுக்கு
   இந்த உலகில் எல்லா நன்மையும் உண்டாகும்
   கருத்தாக அரங்கன் திருவடி பற்றி
   கந்தவேலன் என் சூட்சும தீட்சை அடைந்து
4. அடைந்து அரங்கனே முருகனே என
   அனுதினமும் ஜெபதபம் செய்துகொண்டு
   வரங்களென தர்மவழியை கடைபிடிக்க
   வையகத்தில் பேரிடர்காலங்களிலும் துன்பமில்லா
5. துன்பமில்லா வாழ்ந்து உலகோருக்கு
   தெரிவிப்பேன் ஞானவழி காட்டக்கூடிய மேன்மக்களாக
   இன்பமுற நிலை உயர்ந்து அரங்கன் தயவாலே
   இந்த பேருகில் ஞானி ஆகும் வாய்ப்பு பெறுவர்
6. வாய்ப்பு தரும் கலியின் சிறந்த யோகி
   வாழவைக்கும் கலியுகத்தின் சிறந்த ஞானி
   ஐயமற எந்தன் மகா சூட்சும யோகி
   அரங்கனை தொடர்ந்து உலகோர் வரவரவே
7. வருகின்ற காலங்கள் தொட்டு
   வையகத்தில் ஞானசித்தர் ஆட்சிகாலம்
   பெருமைபட அமைந்து உலகோருக்கு பாதுகாப்பும்
   பேரிடரும் விலகிஓடி அமைதிகாணும்
8. காணவே பிரணவக்குடிலின் ஞானி
   கந்தவேலன் என் அவதார யோகி
   ஞானயுகம் படைக்க வந்த மாதவசி
   ஞானியரின் ஆசிபெற்று திருவடி தீட்சைபெற்று உலகோர் வர

9. வறுமை ஒழியும் வையகம் பலம்பெறும்
பெருமையான பாதுகாப்பும் கூடி
பேருலகமே ஞானயுகமாற்றம் பெறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேளலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.